கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

# CC.No. 45/2024

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தன் | வயது | 60 |
| தந்தை பெயர் | நடேசன் | ஜாதி | |
| தொழில் | கூலி வேலை | மதம் | |
| ஊர் | குடவாசல் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் குடவாசலில் வசித்து கூலி வேலை பார்த்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 க்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு விபரம் எதுவும் தெரியாது. இன்றிலிருந்து 2,3 வருடங்களுக்கு முன்பு என்னிடம் போலீசார் கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. (பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 17.09.2021 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நானும், வீரமணி என்பவரும் எங்கள் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த குடவாசல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.946/2021 ச.பி.294(பி), 324, 506(2) இதச வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், வீரமணி முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகசரில் நானும், வீரமணி சாடசிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நானும் படித்து பார்க்கவில்லை போலீசாரும் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

S CINTHA Digitally signed by S CINTHA DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91 Date: 2024.11.20 17:57:07 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
திருவாரூர்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 45/2024**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரமணி | வயது | 33 |
| தந்தை பெயர் | செல்வம் | ஜாதி | |
| தொழில் | TNCSC இரவு காவலர் | மதம் | |
| ஊர் | குடவாசல் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் குடவாசலில் வசித்து TNCSC இரவு காவலராக வேலை பார்த்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 க்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு விபரம் எதுவும் தெரியாது. இன்றிலிருந்து சுமார் 1 வருடத்திற்கு முன்பு போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. (பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 17.09.2021ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நானும், ஆனந்தன் என்பவரும் எங்கள் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த குடவாசல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.946/2021 ச.பி.294(பி), 324, 506(2) இதச வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், ஆனந்தன் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகசரில் நானும், ஆனந்தனும் சாடசிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நானும் படித்து பார்க்கவில்லை போலீசாரும் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2024.11.20 17:57:41 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்